
ராணி
காமிக்ஸ்
மர்மக் கல்லறை
ரூ. 2

அடுத்த காமிக்ஸ்

புதிய கதாநாயகன்

முரட்டுக்காளை

கார்த்

தோன்றும்

தங்கத் தீவு

தீவுக்குள் நுழைந்த கொள்ளையர்களை
கார்த் தேடிக் கண்டுபிடித்து பந்தாடுகிறார்!

படிக்கத் தவறாதீர்கள்!

ஜூலை 1-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007

புதிய கதாநாயகன்

முரட்டுக்காளை கார்த்

முகமூடி மாயாவி, ஸ்பைடர் மேன், பிளாஷ் கார்டன் போன்று "முரட்டுக்காளை கார்த்" என்ற புதிய கதாநாயகன் இப்பொழுது அமெரிக்காவில் அறிமுகமாகி இருக்கிறான்!

முகமூடி மாயாவி போன்று வீரதீரச் செயல்களில் சூரப்புலி, கார்த்! அதிரடி வேட்டையில் அசகாய சூரர்! மாணவ - மாணவிகளின் மனங்கவர்ந்த புதிய வீரர்!

அந்த மாவீரன் கார்த் இப்பொழுது தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டார்! "ராணி காமிக்ஸ்" பெரும் பணச் செலவில் கார்த்தை தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்திருக்கிறது!

முரட்டுக்காளை கார்த்தின் முதல் வீரச் செயல் அடுத்த "ராணி காமிக்ஸ்"சில் இடம் பெறுகிறது! படிக்கத் தவறாதீர்கள்!!

அ.இ.அ.தி.மு.க. மாநில மாநாடு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநில மாநாடு இந்த மாதம் 25, 26 தேதிகளில் மதுரையில் நடக்க இருக்கிறது. இந்த மாநாட்டை வெற்றி மாநாடாக நடத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா , கேட்டுக் கொண்டுள்ளார்.

இலவசம்!

அன்பார்ந்த மாணவ-மாணவிகளே! இந்த இதழோடு, நோட்டு புத்தகங்களில் ஒட்டும் வண்ண லேபிள்களை நீங்கள் பெற்றீர்கள். அடுத்த காமிக் சோடு (1-7-92 இதழ்) பள்ளிக் கால அட்டவணை உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

அதனால் உங்கள் "ராணி காமிக்"சுக்கு இப்பொழுதே கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்! இலவசமாக வண்ண கால அட்டவணையைப் பெறுங்கள்!

உலக வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரஷியா, சீனா, இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய 5 நாடுகள் அணுஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு விற்பது இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் ஆர். வெங்கடராமன் மீண்டும் போட்டியிட மாட்டார். அடுத்த மாதம் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் சென்னையில் தங்கி விட திட்டமிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸ் அதிபர் தேர்தல்!

பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் தேர்தல் சென்ற மாதம் நடந்தது. இந்தத் தேர்தலில் திருமதி அகினோவின் ஆதரவாளர் ராமோஸ் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். இந்தத் தேர்தலில் வாக்குகளின் எண்ணிக்கை தொடர்ந்து 20 நாளாக எண்ணப் பட்டது.



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஓர் ஆண்டு வருமானம் 118 கோடி ரூபாய் ஆகும்.

ராணி காமிக்ஸ்-192
(மாதம் இருமுறை இதழ்)

ஜூன் 16-30
1992

மர்மக் கல்லறை

அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் உள்ள பள்ளத்தாக்கில் ஜானி குதிரையில் விரைந்து வந்து கொண்டிருந்தார். அந்தக் கரடுமுரடான பாதையிலும் குதிரை சீரான வேகத்தில் பாய்ந்து வந்துகொண்டிருந்தது அந்தப் பள்ளத்தாக்கில் குதிரையின் காலடி ஓசையைத் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு காக்கா குருவியைக் கூடப்பார்க்க முடியவில்லை.

ஒரு சரிவான பாதையில் குதிரை திரும்பியபோது– அந்தக் கோரக் காட்சி ஜானியின் மனதை பயங்கரமாக உலுக்கியது.
ஆ...! என்ன இது?
ஒருவர் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். கீழே ஒரு பெண் மயங்கிக் கிடந்தாள்.
உடனே ஜானி அருகில் சென்று தூக்குக் கயிற்றில் இருந்து அவரை விடுவித்தார்.
அடடா! ஆள் இறந்துவிட்டாரே! கொஞ்சம் தாமதித்து விட்டேனே...!

ஜானி, தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தவரை கீழே கிடத்தி சோதனை செய்து பார்த்தார்.
இவர் இறந்து அரை மணிக்கு மேல் இருக்கும் போலிருக் கிறதே!
அடுத்தது– மயங்கிக் கிடந்த பெண்ணின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மயக்கத்தை நீக்கினார்.
இந்தாருங்கள்! இதைக் குடியுங்கள். எல்லாம் சரியாகிவிடும்!
தண்ணீரைக் குடித்தவுடன் அவள் மயக்கத்தில் இருந்து முழுவதுமாக விடுபட்டாள்.
அய்யோ! கொலைகாரர்கள்...! கொலைகாரர்கள்...!
பயப்படாதீர்கள். நான் இருக்கிறேன்! என்ன நடந்தது?

அப்போது– அந்த வழியாக நான்கைந்து பேர் குதிரையில் வந்தார்கள்.
அய்யோ... பெர்தின் வந்துவிட்டானே! அவர்கள் இவரிடம் வம்புக்கு போகக்கூடாதே!
யார் இவர்கள்? பார்த்தால் கொள்ளையர்கள் போலத் தெரிகிறதே!

குதிரையில் வந்த ஐவரும் கையில் துப்பாக்கியுடன் ஜானியை சுற்றி வளைத்தார்கள்.
யார் நீ? இங்கே என்ன செய்துகொண் டிருக்கிறாய்...?
இவன்தான் பெர்தின்.

நான் ஒரு வேலையாக இந்தப் பண்ணை வழியாக வந்தேன்! மயங்கிக் கிடந்த இந்தப் பெண்ணைப் பார்த்தேன். உதவி செய்து கொண்டிருக்கிறேன்!
அத்துடன் உன் வேலை முடிந்துவிட்டது! பேசாமல் போ!
ஏய்...! இவளை நம் பண்ணைக்கு இழுத்துக் கொண்டு வாங்கடா!
ஆ...!

உடனே ஒருவன் அவளை அழைத்துச் செல்ல முயன்றான்.
நில்லு! நான் அவளை உங்களுடன் அனுப்ப மாட்டேன்!
ஓகோ...! அப்படியா?
எனக்காக நீங்கள் சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள்! நான் அவர்களுடன் போய்விடுகிறேன்!

எய் மிஸ்டர்! அவள் சொன்னதைக் கேட்டாயா? அவளை நீ தடுக்க முடியாது! நீ பேசாமல் உன் வேலையைப் பார்!
அவள்தான் எங்கள் பண்ணைக்கு முதலாளி!
சரி! இவர் எதற்காக தூக்கில் போடப்பட்டார்?
அவன், அவ்ளை கடத்த வந்தான். அதற்குரிய தண்டனையை அடைந்துவிட்டான்!

உடனே பெர்தின் புறப்பட்டான்.

ஜானி மட்டும் தனியாக அவனுடைய பிணத்தை அந்த இடத்திலேயே புதைத்தார்.
அப்போது ஒருவன் குதிரையில் அங்கே வந்தான்.
அநாவசியமாக ஓர் உயிர் போய் விட்டதே!
ஏய்...! யார் நீ?
யாரைக் கேட்டு இந்த இடத்தில் கல்லறை கட்டினாய்... மரியாதையாக கல்லறையை வேறு இடத்துக்கு மாற்று!
முடியாது!

இந்த இடத்தில் யாரும் எதுவும் செய்யக்கூடாது. அதற்கு அதிகாரம் இல்லை!
உனக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தார்களோ, அவர்தான் எனக்கும் கட்டளை யிட்டிருக்கிறார்!

என்னடா சொன்னாய்...? எதிர்த்தா பேசுகிறாய்?
சண்டைக்குத் தயாராக வந்துவிட்டாயா?
படார்...!
உடனே அவன், ஜானியைத் தாக்கினான்.

என்னை அடித்துவிட்டாயா? உன்னை...!
ஹும்...!
ஆ...!
ஜானி ஓங்கி ஒரு குத்துவிட்டார்
இருவருக்கும் பயங்கரச் சண்டை நடந்தது. ஜானி அவனைத் தூக்கிப் பந்தாடினார்.
ஹும்...!
ஆ....
ஹும்....
அம்மா...!
டமார்...!


அவன் துப்பாக்கியை எடுத்து ஜானியை சுட முயன்றான். ஆனால் அதற்குள் ஜானி முந்திக்கொண்டார். அவன் துப்பாக்கியை தட்டிவிட்டார்.
இவ்வளவு நேரம் நீ கேள்வி கேட்டாய். இப்பொழுது நான் சில கேள்விகள் கேட்கிறேன். மரியாதையாக பதில் சொல்!

யார் அவனை தூக்கிலிட்டது? எதற்காக அவனுக்கு அந்த தண்டனை? அந்தப் பெண் பண்ணைக்கு முதலாளி என்றால் அவள் ஏன் ஓட வேண்டும்?
ஜானி சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

இவன் பெயர் மார்க்! இவன் ஒரு எத்தன்! எங்கள் முதலாளியை கடத்திச் செல்ல திட்டம் போட்டான். எங்கள் முதலாளிக்கு பாதுகாவலராக பெர்தின் இருக்கிறார். அவர்தான் மார்க்குக்கு இந்தத் தண்டனை கொடுத்தார்!
ஜானி அவனை அழைத்துக் கொண்டு பெர்தினிடம் வந்தார்.
இவனை ஏன் இங்கே அழைத்து வந்தாய்?

சார்! இவன் அந்த மார்க்குக்கு பண்ணை நிலத்திலேயே கல்லறை கட்டிவிட்டான். அதை அகற்றச் சொன்னதற்கு என்னை தாக்கிவிட்டான்!
இவன்தான் இந்த பண்ணைக்கு போர்மென். இவன் சொல்லுக்கு நீ ஏன் கட்டுப்பட வில்லை?
பெர்தின் கேட்டான்.
ஒரு கொலையைச் செய்துவிட்டு மூடி மறைக்கவா பார்க்கிறீர்கள்? எனக்கு உண்மை தெரிய வேண்டும்!
ஏய்...! மரியாதையாக இந்த இடத்தைவிட்டு போய்விடு! இல்லாவிட்டால்...!

பெர்தின்! நான் இப்போது போகிறேன். ஆனால் நான் இங்கேதான் சுற்றிக் கொண்டிருப்பேன்! எச்சரிக்கை!
உனக்கு யார் வேலை கொடுத்து உன்னை தங்க வைக்கிறார்கள் என்று பார்க்கிறேன்!
உடனே ஜானி அங்கிருந்து புறப்பட்டார்.
பெர்தின் ஒரு அயோக்கியன்! ஏதோ தவறு செய்து கொண்டிருக்கிறான்! அவனை விடக் கூடாது!

ஜானி நேராக நகருக்குள் வந்தார். ஒரு மதுக் கடைக்குள் நுழைந்தவர் அங்கே நடப்பதை வேடிக்கைப் பார்த்தார்.
நீங்கள் பெர்தினுடைய ஆட்களாக இருந்தால் எனக் கென்ன பயம்? என்னை யாரும் ஏமாற்ற முடியாது!
ஏன் ரோசி இப்படி ஆத்திரப்படுகிறாய்?
ரோசிதான் அந்த மதுக் கடைக்கு சொந்தக்காரி.

ரோசி! நாங்கள் சொல்வதைக் கேள்! குடிக்க மது கொடு. பணம் பின்னால் தருகிறோம்! எங்கள் மீது நம்பிக்கை இல்லையா?
அந்தக் கதை இங்கு வேண்டாம்! பணத்தை கொடுத்துவிட்டு குடியுங்கள்!

எங்களையே எதிர்த்துப் பேசுகிறாயா?
இவளை விடக்கூடாது!
திருட்டு நாய்களே! விடுங்கடா என்னை!
ஒருவன் ரோசியை பிடித்துக்கொண்டான்.

ஜானி, நடப்பதை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தார்.
பெர்தினின் கொட்டம் நகரம்வரை கொடிகட்டி பறக்கிறது. அவனை எதிர்க்க ஆள் இல்லை போலும்!
என்னை விடுங்கடா...!

அப்போது-
ஒரு நிமிடம்...! அவளை விடு!
நீ யாரடா என்னை அதிகாரம் செய்வதற்கு?
நானா? போய் உன் தலைவன் பெர்தினிடம் கேட்டுப் பார்!
கும்...!
ஜானி அவனுக்கு ஓங்கி ஒரு குத்து விட்டார்.

ரோசியை பிடித்து வைத்து இருந்தவன் அவளை உதறித் தள்ளிவிட்டு துப்பாக்கியை எடுத்து ஜானியை குறி வைக்க முயன்றான்.
நீ தூரப் போ! உன்னை பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன்!
படார்...!
ஆ...!
அதற்குள் ஜானி துப்பாக்கியை எடுத்து, அவர்களைச் சுட்டார்.
டுமீல்...!
டுமீல்...!
போங்கடா... போய் ஜானி எங்களை சுட்டுத் தள்ளுகிறான் என்று, பெர்கினிடம் சொல்லுங்கடா!

டேய்...! நீயும் அவர்களுடன் வந்தவன் தானே...! இந்த பிணத்தை எடுத்துக்கொண்டு பெர்தினிடம் சென்று விசயத்தைச் சொல்!

மேடம்! என்னை இங்கே வேலைக்கு வைத்துக்கொள்ளுங்கள்! பெர்தினை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!
உன்னைப் போன்ற வீரன் எனக்கு நிச்சயம் தேவைதான்...!

என் பெயர் ஜானி மேடம்...!
என் பெயர் ரோசி என் கணவர் ஸ்மித். பெர்தினிடமிருந்து என்னை காப்பாற்றியதற்கு நன்றி!
மேடம்...! எனக்கு யாரும் வேலை கொடுக்க மாட்டார்கள் என்று பெர்தின் சொன்னான். ஆனால் நீங்கள் கொடுத்து விட்டீர்கள்!
அவன் என்ன சொல்லுவது? அவனா இந் நகருக்குத் தலைவன்

அதேநேரம்— பெர்தினின் ஆள் ஒருவன், மதுக் கடையில் ஜானியால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களை குதிரையில் ஏற்றி பெர்தின் இடத்துக்கு கொண்டுவந்தான்.
சார்! ஜானிக்கு என்ன தைரியமிருந்தால் நம்மிடமே மோதிப் பார்க்கிறான்!
சரி, நீ போ! அவனை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!

ஜானியும் ரோசியும் இணைந்துவிட்டதைக் கேட்ட பெர்தின் திகைத்துப் போனான்.
இனிதான் பிரச்சினைகளே ஆரம்பம் சார்...!

ஏய்! நீ ரோசியின் இடத்துக்குச் சென்று நான் யார் என்பதை அவளுக்குக் காட்டு! ஏற்கனவே அவள் கணவனுக்கு ஏற்பட்ட முடிவை மறந்திருக்க மாட்டாள்...!
அன்று மாலை—
வாருங்கள்...! ரோசியின் மதுக் கடையை சூறையாடுவோம். நாம் யார் என்று அவளுக்கு காட்ட வேண்டும்....
அடப்பாவிகள்...! கொலைகாரர்கள் வேட்டைக்கு புறப்பட்டு விட்டார்களே...!

பெர்தினின் ஆட்கள் ரோசியின் மதுக் கடைக்கு வந்தார்கள்.
ஏய்... ரோசி! இங்கே வந்து எங்களுக்கு மதுபானங்களை பரிமாறு...!
ரோசி எந்தவித பதிலும் சொல்லாமல் சிலையாக நின்றாள்.

ஏய்...! நான் சொல்வது காதில் விழவில்லையா?
என்னால் பரிமாற முடியாது! என்னுடைய புதிய ஆள் உங்களுக்கு பரிமாறுவார்...!
ரோசி அலட்சியமாக கூறினாள்.

ஜானி! இவர்களுக்கு மதுபானம் வேண்டுமா? ஸ்பெஷலாக என்ன மதுபானம் இருக்கிறது. எடுத்துக் கொடு!
இவர்களுக்கு துப்பாக்கி பானம்தான் சரி. ஒரு சொட்டு கொடுத்தால் போதும். எமலோகம் போய்விடுவார்கள்...!
முட்டாள்...!

ஏய்... ஜானி! மரியாதையாக ஊரைவிட்டுப் போய்விடு...! இல்லாவிட்டால் விபரீத விளைவுகளை சந்திக்க நேரிடும்! ஜாக்கிரதை!

ஆத்திரமடைந்த ஜானி மூர்க்கத்தனமாக அவனைத் தாக்கினார்.
என்னை சண்டைக்கு இழுக்கத்தானே இப்படி பேசுகிறாய்... வாடா...! மோதிப் பார்ப்போம்...!
படார்...!

இங்கு வருவதை இன்றோடு நிறுத்திக்கொள்ளுங்கள்! இல்லாவிட்டால் நான் பேசமாட்டேன். என் துப்பாக்கிதான் பேசும்!
வெளியில் இருந்து வந்து எங்களையே மிரட்டிப் பார்க்கிறாயா?

முதலில் வெளியே போங்கடா.
நாங்கள் இப்போது போகிறோம். ஆனால் விரைவிலேயே திரும்பி வருவோம்!
போங்கடா! அடுத்த முறை வரும்போது பெர்தினையும் அழைத்து வாருங்கள்!
ரோசியின் மதுக் கடையை அழிக்க வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள்.
பரவாயில்லை ஜானி! அவர்களை விரட்டி விட்டாயே...!
ரோசி! உடனடியாக எனக்கு ஒரு குதிரை வேண்டும். அவசரம்...!

பெர்தினின் கூட்டத்தினர் ஆத்திரத்துடன் அந்தக் கல்லறைக்கு வந்தார்கள்.
ஜானியை அவமானப்படுத்த இதுதான் சரியான வழி...!
கல்லறைக்குள் இருக்கும் மார்க்கின் பிணத்தை தோண்டி எடுத்து ரோசியின் கடைக்கு முன்னால் போடுவோம்...! அப்பொழுதுதான் ரோசிக்கு புத்தி வரும்!
திடீரென்று அந்த இருளில் இருந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது.
ஆ...!
டுமீல்...!
என்னடா இது? துப்பாக்கிச் சத்தம்...!

அவரவர் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள மரத்திற்குப் பின்னால் பதுங்கிக்கொண்டார்கள்
இருட்டில்... எதுவுமே சரியாகத் தெரியவில்லையே! ஒருவேளை கல்லறையில் இருந்து சத்தம் வருகிறதா?
ஆ...வாருங்கள் ஓடிவிடலாம்...!
அது எப்படி கல்லறையில் இருந்து குண்டுகள் வரும்!
அனைவரும் வாருங்கள் ஓடி விடலாம்!
முட்டாள்! என்ன தைரியமிருந்தால் கல்லறையைத் தோண்ட வருவார்கள்!
ஜானிதான் ஒரு பாறைக்குப் பின்னால் பதுங்கி இருந்து அவர்களைச் சுட்டார்.

அனைவரும் பெர்தினிடம் வந்தார்கள்.
போன காரியம் என்னவானது?
அதை ஏன் கேட்கிறீர்கள்...!
ஜானியையும், ரோசியையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ழியில் கல்லறைக்கு வந்தோம். கல்லறையில் இருந்து துப்பாக்கிச் சத்தம் வருகிறது.
அது எப்படி கல்லறைக்குள் இருந்து குண்டுகள் வரும்? முட்டாள்கள். உங்களை யாரோ ஏமாற்றி இருக்கிறார்கள்!

பெர்தின் அதைக்கேட்டு தன் ஆட்களுடன் நேராக
அந்த மர்மக் கல்லறைக்கு வந்தான்.

டேய்...! முதலில் இந்தப் பிணங்களை அப்புறப்படுத் துங்கடா...!
ஜானியால் சுடப்பட்டவர்கள் அங்கே பிணமாக கிடந்தார்கள்.

இரண்டு பேர் குதிரையில் இருந்து இறங்கி பிணங்களை அப்புறப்படுத்த முயன்றார்கள். அப்போது—
துபபாக்கிக் குண்டுகள் மீண்டும் வருகிறது. மேற்கொண்டு அசையாதே...!
மீண்டும் குண்டுகள் சரமாரியாக வந்தன.

ஜானி! நீதான் சுடுகிறாய் என்று எங்களுக்குத் தெரியும்! என் ஆட்களின் பிணத்தை எடுத்துப் போகவே இங்கே வந்திருக்கிறோம்!
ஓ.கே. பெர்தின்! ஆனால் ஏதாவது குளறுபடி செய்ய நினைத்தால் என் துப்பாக்கி உன் உயிரைக் குடித்துவிடும்! எச்சரிக்கிறேன்!
உடனே, பெர்தின் இருவரின் பிணங்களையும் குதிரையில் ஏற்றி புறப்பட்டான்.
ம்...புறப்படுங்கள்!

கொஞ்ச நாள் பெர்தின் அமைதியாக அடங்கிப்போய் இருந்தான்.
மேரி என்னை திருமணம் செய்துகொள்ள சம்மதிக்க மாட்டாள் என்று நினைக்கிறேன்!
ஏன்?
ஜானியைப் பற்றி அவள் முழுமையாக தெரிந்துகொண்டு விட்டாள். அவனிடம் அவள் உதவி கேட்டால் நம் திட்டம் தவிடு பொடியாகிவிடும்!
ஜானி உயிரோடு இருந்தால்தானே! அவனைத் தீர்த்து விட்டால்....?

ஆனால் நாம் நேரடியாக
செயலில் இறங்கக்கூடாது!
மிராண்டாவை வைத்து அவன்
கதையை முடிக்க வேண்டும்!
மிராண்டாவா?
அவன் சம்மதிப்
பானா?

பணத்துக்காக அவன்
எதையும் செய்வான்! வா
அவனை சந்தித்துவிட்டு
வரலாம்!
இருவரும் புறப்பட்டார்கள்

பள்ளத்தாக்கில் ஓர் இடத்தில்—
சார்! அங்கே பாருங்கள் மேரி!
அவள் தன் காதலன் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தப் போகிறாள்!
மேரி ஒரு குதிரை வண்டியில் பறந்துகொண்டிருந்தாள்.


மேரி நேராக தன் காதலன் மார்க்கின் கல்லறைக்கு வந்தாள்.
வாழவேண்டிய உங்களை இப்படி நிர்மூலமாக்கி விட்டார்களே!
மேரி வேதனையில் உருகினாள்.

அப்போது பின்னால் இருந்து ஓர் ஆண் குரல் கேட்டது. மேரி திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்.
உன் காதலனுக்கு அஞ்சலி செலுத்து கிறாயா?
யார் நீ?

என்னை அதற்குள் மறந்துவிட்டாயா?
ஓ... நீங்களா? அன்றைக்கு நீங்கள் மட்டும் என்னை காப்பாற்றி இருக்காவிட்டால் மார்க் போன இடத்திற்கு நானும் போயிருப்பேன்!
அது வேறு யாருமல்ல. ஜானிதான் குதிரையில் நின்றுகொண்டிருந்தார்.

உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்!
நானும்தான்! பெர்தின் சொல்வது போல் மார்க் என்னைக் கடத்திச் செல்லவில்லை! நான் விரும்பப் பட்டுத்தான் அவருடன் சென்றேன்!
மேரி நடந்ததை விளக்கமாக கூறினாள்.

நீங்கள்தானே இந்தப் பண்ணைக்கு முதலாளி?
ஆமாம்! ஆனால் என் அப்பா இறக்கும்போது பெர்தினை எனக்கு பாதுகாவலராக வைத்துவிட்டார். எனக்கு திருமணம் ஆனபிறகுதான் பண்ணை என் கைக்கு வரும்!
உடனே ஒரு திருமணம் செய்து கொள்ள வேண்டியது தானே?
பெர்தின் என் பண்ணையை கைப்பற்றுவதற்காக என்னை திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறான்!

சட்டத்திற்குப் போகலாம் என்றால், நீ மேஜர் ஆகவில்லை என்று என்னை ஏமாற்றிவிடுகிறார்கள்!
அப்படியா?
எதைப்பற்றியும் நீ கவலைப்படாதே! இனி எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்! முதலில் மார்க் உன்னைக் கடத்தியது உண்மையா?
இல்லை! அவர் எனக்கு உதவி செய்யத்தான் வந்தார்!

மார்க் ஒரு சாதாரணமானவர்தான். ஆனால் என்னை காப்பாற்ற துடித்தார். பேசாமல் எங்காவது தலைமறைவாகிவிட்டு எனக்கு 21 வயது வந்தவுடன் திரும்பி பண்ணைக்கே வந்துவிட யோசனை கூறினார்!
அருமையான யோசனை!
அதன்படிதான் மார்க் என்னை அழைத்துச் சென்றார். அதற்குள் பெர்தினிடம் அகப்பட்டோம்!
இப்பொழுது எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது! நான் வருகிறேன்!

ஜானி புறப்பட்டார்.
ஜானி என்னை பெர்தினிடம் இருந்து எப்படியும் காப்பாற்றிவிடுவார்!
அதேநேரம்—
ஓகோ...! இருவரும் இரகசியமாக சந்தித்துவிட்டு போகிறீர்களா? இருங்கள் பார்த்துக்கொள்ளுகிறேன்!
மூன்று நாளுக்குப் பிறகு—
டேய்...! இவன்தான் மிராண்டா! ஜானியின் உயிரைக் குடிக்க வந்திருக்கிறான்!
மிராண்டாவை தன் ஆட்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான், பெர்தின்.

பெர்தின்! உன்னை சந்தித்ததில் பெருமைப்படுகிறேன்! ஜானி உனக்கு எதிரி என்றால், எனக்கும் அவன் எதிரிதான்!
சரி மிராண்டா! நேரத்தை வீணாக்க வேண்டாம்! ஜானி இப்போது ரோசி ஸ்மித்தின் மதுக் கடையில்தான் இருப்பான்! போ!
ரோசி ஸ்மித்தா...!
இவர் பேசிக்கொண்டதை மேரி மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஆமாம்...
நீ நினைப்பது
சரிதான்!
ஆகா...! ஸ்மித்தைக்
கூட நான்தான் பரலோகத்திற்கு
அனுப்பி வைத்தேன்!
ஞாபகம் இருக்கிறதா?
அப்படியா...?
ஓகோ...! ஸ்மித்தை
கொன்றது போல
ஜானியையும் கொலை
செய்யப்
போகிறீர்களா?
விடமாட்டேன்!
வா மிராண்டா! என்
திட்டம் முழுவதையும்
உனக்குச்
சொல்லுகிறேன்!
உன்
திட்டமெல்லாம்
எனக்கு வேண்டாம்!
எனக்கு சேரவேண்டிய
பணத்தை முதலில் கொடு!

பெர்தின் மிராண்டாவுக்கு விருந்து கொடுத்தான்.
அனைவரும் போதையில் இருக்கிறார்கள்!. இதுதான் சரியான நேரம்...!
மேரி இரகசியமாக திட்டம் தீட்டினாள்.


உடனே மேரி இரவோடு இரவாக குதிரை வண்டியை எடுத்துக்கொண்டு பறந்தாள்.
ஏய்... இன்னும் கொஞ்சம் வேகமாகப் போ...!

மேரி நேராக ரோசியின் மதுக் கடைக்கு வந்தாள்.
ஜானி...!
மேரி! இன்ன இது? இந்த நேரத்தில் இங்கே வந்திருக்கிறாய்...!
என்ன மேரி! எதுவும் உதவி வேண்டுமா?
அங்கே ஜானியின் உயிருக்கு பெர்தின் விலை பேசிவிட்டான்! மிராண்டா என்பவன் நாளை உங்களை கொல்ல வருகிறான். மிராண்டாதான் உங்கள் கணவர் ஸ்மித்தையும் கொன்றிருக்கிறான்!
அப்படியா?
அதுதான் எனக்கு முன்பே தெரியுமே!

பெர்தினை கொல்லுவதற் காக நான் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!
ஸ்மித்! கவலைப்படாதே, அவனையும் அவன் கூட்டத்தையும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்! முதலில் மேரியை உள்ளே அழைத்துப் போ!
அதேநேரம்— பெர்தின் மாளிகையில் விருந்து அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.
இருங்கள்! என் வருங்கால மனைவியை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன் அவள் அழகோ அழகு...!

பெர்தின், மேரியின் அறைக்குள் வந்தவன் மேரி இல்லாததைக் கண்டு அப்படியே நிலைகுத்திப் போய் நின்றுவிட்டான்.
மேரியை எங்கே? காணவில்லை...! மேரி... மேரி..
குதிரை லாயத்தில் குதிரைகளையும் காணவில்லை! தப்பிவிட்டாளே...!
பெர்தின் பதட்டத்துடன் ஓடிவந்தான்
ஏய்...! மேரி தப்பிவிட்டாள். அநேகமாக அவள் ஜானியைத் தேடித்தான் போய் இருக்க வேண்டும்!
அப்படியானால் ரோசியின் மதுக் கடைக்குச் சென்றால் மடக்கிவிடலாம்!

..னே, பெர்தின், மிராண்டாவையும் அழைத்துக்கொண்டு புறப்பட் ..ான். வழியில் அந்தக் கல்லறை வழியாக வந்தார்கள்.

பெர்தின் நேராக ரோசியின் மதுக் கடைக்கு வந்தான்.
என்ன பெர்தின்? இந்த நேரத்தில் கூட்டமாக வந்திருக்கிறாய்...!
ஏய் ரோசி! மேரி இங்கே இருக்கிறாளா? உண்மையைச் சொல்லிவிடு!
ஆமாம்! அவள் இங்கேதான் இருந்தாள்! ஆனால் ஜானி அவளை மார்கின் கல்லறைக்கு அழைத்துப் போயிருக்கிறார்!
பெர்தின்! உன் திட்டமெல்லாம் எங்களுக்கு தெரிந்துவிட்டது! நீ என் கணவரைக் கொன்றது கூட தெரியும்! அதே போல ஜானியை கொலை செய்ய திட்டம் போடுகிறாய்...! ஆனால் உன்னால் அது முடியாது!

அப்படியா? அதையும் பார்த்துவிடுகிறேன்! இப்பொழுது போகிறேன்! பிறகு உன்னை கவனித்துக்கொள் ளுகிறேன்!
பொர்தின் போனதும், ரோசி அறைக்குள் நுழைந்தாள். மேரி அங்கேதான் இருந்தாள.
அவர்கள் எனனைத் தேடி மார்கின் கல்லறைக்குத்தான் போவார்கள்!
மீதியை ஜானி பார்த்துக்கொள் வார்...!

என்ன பெர்தின்! போகிற போக்கைப் பார்த்தால் எனக்கு வேலை இல்லாமல் போய்விடும் போலிருக்கிறதே!
மிராண்டா...! உனக்குத் தேவை பணம்தானே! அதை வாங்கிக்கொள்!
பெர்தின் தன் ஆட்களுடன் பள்ளத்தாக்கில் வந்துகொண்டிருந்தபோது
அங்கே பாருங்கள்! மேரி போகிறாள்...!
தூரத்தில் மேரியின் வண்டி போய்க்கொண்டிருந்தது.


மேரி வண்டியை நிறுத்திவிட்டு மார்க்கின் கல்லறைக்குத்தான் சென்றிருக்கிறாள்!
பரவாயில்லை! வேலையை சுலபமாக முடித்துவிட்டாள்! ஏய் கோழியை அமுக்குவது போல அவளை அமுக்கி விடுங்கள்!

கல்லறையில்— மேரி மண்டியிட்டு வணங்கிக் கொண்டிருந்தாள். பெர்தின் அவளை சுற்றி வளைத்தான்.

மேரி! என்னிடம் கண்ணாம்பூச்சிக் காட்டிவிட்டு ஓடப் பார்க்கிறாயா? இப்பொழுது வசமாக மாட்டிக்கொண்டாய் பார்த்தாயா?

டேய்... பெர்தின்! என்னை மேரி என்றே நம்பிவிட்டாயா? இந்தா வாங்கிக்கொள்...!
டுமீல்...!
டுமீல்...!
ஜானிதான் மேரி போல நாடகமாடினார்.

ஜானி இரண்டு கைகளிலும் துப்பாக்கியை வைத்துக்கொண்டு, பெர்தின் கூட்டத்தை தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தார்.

எங்களிடமே மோதிப் பார்க்கிறாயா? உன்னை...!
நீ என்னடா பெரிய கொம்பனா...?

இந்தா வாங்கிக்கொள்...! பரலோகத்துக்கு சீக்கிரம் போ!
டுமீல்...!
ஆ... அம்மா...!

டேய்... அந்தக் கல்லறையை சுட்டுத் தள்ளுங்கடா...!
பெர்தின் கட்டளையிட்டான்.
உடனே ஜானி கல்லறையை காப்பாற்ற பாயந்தார்.

ஜானி யாரையும கல்லறையை சுட அனுமதிக்கவில்லை. அதற்குள்
ஜானி தன் துப்பாக்கிக் குண்டுகளை அவர்களுக்குபரிசாக கொடுத்தா

ஒவ்வொரு குண்டுக்கும் ஒருத்தன் பலியானான். ஜானியை கொல்ல
பணம் கொடுத்து அழைத்துவந்த மிராண்டா கூட உயிரைத் துறந்த

கடைசியில் பெர்தின் மட்டும் உயிரோடு இருந்தான்.
பெர்தின்...! நீ பண்ணைக்காக உழைத்து உழைத்து ஓடாக தேய்ந்துவிட்டாய்...! அதனால் உனக்கு ஓய்வு வேண்டாமா? போ... நீயும் உன் தோழர்களுடன் சென்று ஓய்வு எடு...!
ஜானி...! ஆ...! அம்மா...!
ஏய்...!
ஜானியின் கடைசி துப்பாக்கிக் குண்டு பெர்தினின் உயிரைக் குடித்தது.
பரவாயில்லை! எந்தக் குண்டுமே வீணாகவில்லை! எல்லாருமே காலி! இனி மேரியின் பண்ணைக்கு ஆபத்து இல்லை!

திறந்த பள்ளி!

—கவிஞர். பொன்னியின் செல்வன்

தம்பி தங்கை வாருங்கள்
திறந்த பள்ளி சேருங்கள்!
வம்பு சண்டைகள் இல்லாமல்
வழங்கும் பாடம் படியுங்கள்!

அன்னைத் தமிழை ஆவலுடன்
அள்ளி அள்ளிப் பருகுங்கள்!
தன்னைத் தந்து நமைவளர்க்கும்
தந்தைத் தாயை வணங்குங்கள்!

ஆங்கிலம், கணக்கு விவரமுடன்
அழமாய் அறிவியல் பயின்றிடுங்கள்!
ஓங்கிய உலகக் கண்பெறவே
ஒழுங்காய் படிக்கணும் வரலாறு!

எழிலுடன் நலத்தில் வாழ்ந்திடவே
இன்னுடல் பயிற்சி செய்திடுங்கள்!
தொழில்முறைக் கல்வி தேர்ந்தெடுங்கள்
திண்டாடாமல் உயர்ந்திடுங்கள்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

காண்டாமிருக வேட்டை!



யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்லு ார்கள். அதுபோல இப்போது ாண்டாமிருகத்திற்கும் கிராக்கி ந்துவிட்டது.

காண்டாமிருகத்தின் கொம்பு ன்று 15 இலட்ச ரூபாய்க்கு விலை போகிறது. அதனால் 'வட்டைக்காரர்கள் காண்டாமிரு த்தை தீவிரமாக வேட்டையாடி ருகிறார்கள்.

பொதுவாக இந்தியாவில் சாம் மாநிலத்தில்தான் காண்டாமிருகங்கள் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால், இப்போது அது தலைகீழாக மாறிவிட்டது. பணத்திற்காக நிறைய காண்டாமிருகங்கள் கொல்லப்படுகின்றன.

காண்டாமிருகத்தை பொறி வைத்து பிடித்து, அதன் மேல் மின்சாரத்தைப் பாய்த்து கொல்லுகிறார்கள். இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இந்தியாவில் காண்டாமிருகத்தின் இனமே இருக்காது!

பழங்கால கையெழுத்து பிரதி!

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் "இங்கிலாந்து அருங்காட்சியகம்" உள்ளது. அங்கு பழங்கால பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டு இருக்கின்றன. அங்குள்ள ஒரு அறையின் அலமாரியில் பழங்கால கையெழுத்து பிரதி இருப்பது தெரிய வந்துள்ளது. அது எகிப்து நாட்டு கையெழுத்து பிரதி ஆகும். 3900 ஆண்டுகளுக்கு முந்தயதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. அது எகிப்து மன்னரை புகழ்ந்து எழுதப்பட்ட கவிதை வடிவில் இருந்தது. இவ்வளவு காலம் அலமாரியில் இருந்தபோதும் அதன் முக்கியத்துவத்தை யாரும் அறியவில்லை. தூசுபடிந்து கிடந்தது. இப்போதுதான் அது பழங்கால கையெழுத்து பிரதி என்பது தெரிய வந்தது. அதை பராமரித்து வருகின்றனர்.

PRESENT SIR!

Never absent from classrooms and school bags, play fields and lockers, short breaks and lunch breaks.

ampro® *Milk Base*

The School going Biscuit